# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2282/23 - 2022 මැයි මස 31 වැනි අඟහරුවාදා - 2022.05.31

*2282/23 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**
**2 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபார பண்ட இனம் தொடர்பில் அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2022, யூன் மாதம் 01 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதும் 2022, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய 2270/ 19 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதும் 2022, மாச்சு மாதம் 28 ஆந் திகதிய 2273/01 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதுமான கட்டளைகள் 2022 யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு மீளப் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, மே 31.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபார பண்ட இனம்* | | | | *விசேட வியாபார பண்ட அறவீடு* |
| | *இ. மு. தலைப்பு* | *இ. மு. குறியீடு* | *விவரணம்* | |
| 1 | 04.03 | 0403.10 | யோகட் | கிலோகிராமிற்கு 2000 ரூபா |
| | | 0403.90 | பிற | கிலோகிராமிற்கு 2000 ரூபா |
| 2 | 04.05 | 0405.10 | வெண்ணெய் கட்டி | கிலோகிராமிற்கு 1500 ரூபா |
| | | 0405.20 | பால் பரவற் பொருட்கள் | கிலோகிராமிற்கு 2000 ரூபா |
| | | 0405.90 | பிற | கிலோகிராமிற்கு 2000 ரூபா |
| 3 | 04.06 | 0406.20 | அரைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட பாலாடைக் கட்டிகள், எல்லா வகையானதும் | கிலோகிராமிற்கு 600 ரூபா |
| 4 | 08.04 | 0804.10.10 | பேரீச்சம் பழங்கள் - புதியவை | கிலோகிராமிற்கு 200 ரூபா |
| | | 0804.10.20 | பேரீச்சம் பழங்கள் - உலர்ந்தவை | கிலோகிராமிற்கு 200 ரூபா |
| 5 | 08.05 | 0805.10.10 | தோடம்பழங்கள் - புதியவை | கிலோகிராமிற்கு 600 ரூபா |
| 6 | 08.06 | 0806.10 | முந்திரியப்பழங்கள் - புதியவை | கிலோகிராமிற்கு 600 ரூபா |
| 7 | | 0806.20 | முந்திரியப்பழங்கள் - உலர்ந்தவை | கிலோகிராமிற்கு 600 ரூபா |
| 8 | 08.08 | 0808.10 | அப்பிள்கள் | கிலோகிராமிற்கு 600 ரூபா |
| 9 | 08.10 | 0810.90.90 | பிற - பழங்கள் | கிலோகிராமிற்கு 600 ரூபா |

EOG *06 - 0029*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.